# மண்டபம் ஊராட்சி ஒன்றியம் கூட்டுறவுத்துறையின் மூலம் பனை விதைகளை நடவு செய்யும் பணி

## செய்தியாளர் பயணத்தின் போது கலெக்டர் ஆய்வு



ராமநாதபுரம், நவ.25

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், மானாங்குடி கடற்கரை பகுதியில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், கூட்டுறவுத்துறையின் மூலம் பனை விதைகளை நடவு செய்யும் பணிகளை செய்தியாளர் பயணத்தின் போது தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

கூட்டுறவுத்துறையின் சார்பாக 72 வது கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் தொடர்ச்சியாக நிறைவு நாளான இன்று மண்டபம் ஊராட்சி ஒன்றியம், மானாங்குடி கடற்கரை பகுதியில் 10000 பனை விதைகளை நடவு செய்யும் பணிகள் நடைபெற்றது.

மரங்கள் காற்று மாசுபாட்டை குறைக்கவும், மண் அரிப்பை கட்டுப்படுத்தவும், மண் வளத்தை மேம்படுத்தவும், நிலத்தடி நீரினை அதிகரிக்கவும் உதவி புரிகின்றன. பனை மரத்திலிருந்து பெறப்படும் உணவுப் பொருட்கள் மருத்துவ குணம் கொண்டதாக உள்ளது. இன்றைய தினம் மாவட்ட கலெக்டர் பனை விதைகளை நடவு செய்து பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்த செய்தியாளர் பயணத்தின்போது கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ஜினு, இணைப்பதிவாளர் மேலாண்மை இயக்குநர் ராஜலட்சுமி மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# 3 வழித்தடங்களில் புதிய பேருந்துகள் அமைச்சர் இ.பெரியசாமி தொடங்கி வைத்தார்



திண்டுக்கல், நவ.25

ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ.பெரியசாமி , திண்டுக்கல் காமராஜர் பேருந்து நிலையத்தில் 3 வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்கத்தை மாவட்ட கலெக்டர் செ.சரவணன் தலைமையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் அரசின் திட்டங்கள் அனைத்துத் த ரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார்.

தமிழ்நாடு முதல மைச்சர் போக்குவரத்துத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து, அதிக நிதி ஒதுக்கீடு செய்து, குக்கிரா மங்களுக்கும் பேருந்து வசதியை ஏற்படுத்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மக்களுக்குத் தேவையான திட்டங்களை திறம்பட செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் அனைத்து தொகுதிகளும் சீரான வளர்ச்சி பெற வேண்டும் என்ற வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில், திண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இன்றைய தினம் திண்டுக்கல் ஒட்டுப்பட்டி (வழி வக்கம்பட்டி, செம்பட்டி, சித்தையன்கோட்டை), திண்டுக்கல் .கோம்பை (வழி பித்தளைபட்டி, அனுமந்தராயன் கோட்டை, கரிசல் பட்டி), திண்டுக்கல் பாப்பணம்பட்டி (வழி பாலம்ராஜக்காபட்டி, கோட்டூர் ஆவாரம் பட்டி) ஆகிய 3 வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்கத்தை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் சராசரியாக நாளொன்றிற்கு 2.10 லட்சம் மகளிர் பயணம் செய்து வருகின்றனர்கள். திண்டுக்கல் மண்டலத்திற்கு ரூ.67.24 கோடி மதிப்பீட்டில் 164 புதிய பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 22,69,70,184 கோடி மகளிர், கட்டணமில்லாமல் பேருந்தில் பயணம் மேற்கொண்டு பயனடைந்துள்ளனர். 1,02,157 லட்சம் திருநங்கைகள் மற்றும் 21,09,385 லட்சம் மாற்றுத்திறனாளிகள் கட்டணமில்லாமல் பேருந்தில் பயணம் மேற்கொண்டு பயனடைந்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், திண்டுக்கல் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் ச.ராஜப்பா, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல் மண்டல பொதுமேலாளர் ஏ. முத்துக்கிருஷ்ணன் மற்றும் போக்குவரத்து அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்.

# பழனியில் அன்புள்ளம் அறக்கட்டளை சார்பாக தூய்மை பணியாளர்களுக்கு மழை கோட் வழங்கும் நிகழ்வு



பழனி, நவ.25

திண்டுக்கல் மாவட்டம் பழனி வ.உ.சி மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் தூய்மை பணியாளர்கள் அலுவலகத்தில் மழைக்காலம் தொடங்கியதால் தூய்மை பணியாளர்களுக்கு உதவிடும் வகையில் அன்புள்ளம் அறக்கட்டளை சார்பாக நகராட்சிக்கு உட்பட்ட 15,16,17,26,ஆகிய வார்டுகளில் பணிபுரியும் பிரிவு இரண்டு மண்டல தூய்மை பணியாளர்கள் 27 நபர்களுக்கு மழை கோட் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றன.

தொடர்ந்து இந்நிகழ்வின் தலைமையாக அறக்கட்டளை தலைவர் முகமது உசேன் செயலாளர் சையது இப்ராஹிம் பொருளாளர் குழந்தைவேல் இணைச் செயலாளர் கல்யாண சுந்தரம் மற்றும் இவ்விழாவின் சிறப்பு அழைப்பாளராக பொள்ளாச்சி பாராளுமன்ற தொகுதி அதிமுக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜா ரவிவர்மா கலந்து கொண்டு தூய்மை பணியாளர்களுக்கு மழை கோட் வழங்கினார்.

தொடர்ந்து தூய்மை பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மழைக் காலத்தில் உரிய நேரத்தில் இதுபோன்ற பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கி வரும் அன்புள்ளம் அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு தூய்மை பணியாளர்கள் மற்றும் மண்டல அதிகாரிகள் தூய்மைப் பணி மேற்பார்வையாளர்கள் உள்ளிட்டோர் தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

# மேலூர் அரசு கலைக்கல்லூரியில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் உணவு அருந்துமிடம் (கேண்டீன்) அடிக்கல் நாட்டு விழா



மேலூர், நவ.25

மதுரை மக்களவை உறுப்பினர் சு.வெங்க டேசன் மேலூர் அரசு கலைக் கல்லூரி விழா ஒன்றில் பங்கேற்ற போது மாணவ மாணவிகள் சு.வெங்கடேசன் எம்.பியிடம் தங்களுக்கு கல்லூரியில் கேண்டீன் வசதி செய்து கொடுக்குமாறு கோரிக்கை வைத்தனர்.

அந்த அடிப்படையில் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்றஉறுப்பினர்தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து கட்டிடம் ரூ. 30லட்சம் மதிப்பீட்டில் கேண்டின் (உணவு அருந்தும் கூடம்) கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அந்த உணவு கூடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா திங்களன்று மேலூர் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மேலூர் நகர்மன்ற தலைவர் யூ.முகமது யாசின், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் கே.ரா ஜேந்திரன், மேலூர் தாலுகா செயலாளர் ஏ.தனசேகரன், மாவட்டக் குழு உறுப்பினர் எம்.கண்ணன் மற்றும் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) ஆண்டனி செல்வராஜ், மற்றும் பேராசிரியர்கள் பொதுப்பணி துறை அதிகாரிகள், மற்றும் கட்டிட ஒப்பந்ததாரர் அட்டப்பட்டி குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


**படிவம் ஜி**
**ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு**

குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்

**(திவால்நிலை மற்றும் திவால்நிலை (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால்நிலை தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016 இன் விதிமுறை 36A (1) இன் கீழ்**

| தொடர்புடைய விவரங்கள் | | |
|---|---|---|
| 1. | நிறுவன கடனாளியின் பெயர், நிரந்தர கணக்கு எண்/சிஐஎன்/எல்எல்பி எண் உடன் | குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட் U31300WB1961PLC025104 |
| 2. | பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி: | தற்போதைய பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: எண்–62, செக்டர்–V 7–வது தளம், சால்ட் லேக் சிட்டி, கொல்கத்தா, மேற்கு வங்காளம், இந்தியா, 700091. |
| 3. | இணையதளத்தின் யுஆர்எல் | https://guptapower.com |
| 4. | பெரும்பாலான நிலையான சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள். | இந்த நிறுவனம் புவியியல் ரீதியாக பன்முகத்தன்மை கொண்ட உற்பத்தித் தளத்தைக் கொண்டுள்ளது. குர்தா – ஒடிசா (கிழக்கு இந்தியா), கும்முடிபூண்டி – சென்னை (தென் இந்தியா) மற்றும் காஷிபூர்–உத்தரகாண்ட் (வட இந்தியா) ஆகிய இடங்களில் வசதிகள் உள்ளன. இந்தியா முழுவதும் பல இபிசி தளங்களும் உள்ளன. கிடைக்கக்கூடிய தகவல்களின்படி, அதன் பிற நிலையான சொத்துக்கள் ராஜர்ஹாட்டில் (மேற்கு வங்கம்), ஒடிசா மாவட்டங்களில் பல்வேறு நிலப் பகுதிகளுடன் மற்றும் ஹலோலில் (குஜராத்) உள்ளன. |
| 5. | முக்கிய தயாரிப்புகள்/சேவைகளின் நிறுவப்பட்ட திறன் | நிறுவனத்தின் தயாரிப்புத் தொகுப்பில் அலுமினியம், அலுமினிய–அலாய் மற்றும் அலுமினிய–எஃகு வலுவூட்டப்பட்ட கடத்திகள், உயர்–அழுத்தம் மற்றும் குறைந்த–அழுத்த மின் கேபிள்கள், கட்டுப்பாட்டு கேபிள்கள், கருவி மற்றும் சிக்னல் கேபிள்கள், ஏரியல் கொத்து கேபிள்கள் மற்றும் தொழில்துறை கேபிள்கள் உள்ளன. நிறுவனம் மின் மாற்ற நிலையங்கள் மற்றும் பரிமாற்றக் கோடுகள் போன்றவற்றுக்கான இபிசி ஒப்பந்தங்களையும், 'ரினோ' என்ற பிராண்ட் பெயரில் உள்நாட்டு கேபிள்கள் சில்லறை விற்பனைப் பிரிவையும் மேற்கொள்கிறது. ஒட்டுமொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு தோராயமாக 1,50,000 மெட்ரிக் டன் வரை இருந்தது. |
| 6. | கடந்த நிதியாண்டில் விற்கப்பட்ட முக்கிய பொருட்கள்/சேவைகளின் அளவு மற்றும் மதிப்பு. | தெரியவில்லை" "குறிப்பு: கடைசியாகக் கிடைத்த நிதிநிலை அறிக்கைகளின்படி, 2021–22 நிதியாண்டில் தயாரிப்புகளின் விற்பனை ரூ. 34,59,77,70,000/– ஆகவும், 2021–22 நிதியாண்டில் சேவைகளின் விற்பனை ரூ. 2,44,73,44,000/– ஆகவும் இருந்தது. |
| 7. | பணியாளர்கள்/பணியாளர்களின் எண்ணிக்கை | தெரியவில்லை" "குறிப்பு: காஷிபூர் (உத்தரகண்ட்) வசதியில் செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சிடி இன் செயல்பாட்டுத் தேவைகளைப் பொறுத்து, தற்போது பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் – ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் உட்பட – சுமார் 500 பணியாளர்கள் வரை உள்ளனர். |
| 8. | இரண்டு ஆண்டுகளுக்கான கடைசியாகக் கிடைத்த நிதிநிலை அறிக்கைகள் (அட்டவணைகளுடன்), கடன் வழங்குநர்களின் பட்டியல்கள், செயல்முறையின் அடுத்தடுத்த நிகழ்வுகளுக்கான தொடர்புடைய தேதிகள் உள்ளிட்ட கூடுதல் விவரங்கள் இங்கே கிடைக்கின்றன: | மேலும் விவரங்களை மின்னணு வடிவத்தில் ip.guptapower@gmail.com மின்னஞ்சல் மூலம் பெறலாம் |
| 9. | குறியீட்டின் பிரிவு 25(2)(h) இன் கீழ் தீர்வு விண்ணப்ப தாரர்களுக்கான தகுதி இங்கே கிடைக்கிறது | தீர்வு விண்ணப்பதாரர்கள் திவால்நிலை மற்றும் திவால்நிலைச் சட்டம், 2016 இன் பிரிவு 29ஏ இன் கீழ் தகுதி பெற்றிருக்க வேண்டும். விவரங்கள் விரிவான ஐஇஓஐ இல் கிடைக்கின்றன, அவை பின்வரும் மின்னஞ்சல் முகவரியில் மின்னணு வடிவத்தில் பெறலாம்: ip.guptapower@gmail.com |
| 10. | ஆர்வ வெளிப்பாட்டைப் பெறுவதற்கான கடைசி தேதி | 10 டிசம்பர், 2025 |
| 11. | வருங்காலத் தீர்வு விண்ணப்பதாரர்களின் தற்காலிகப் பட்டியல் வெளியிடப்பட்ட தேதி | 20 டிசம்பர், 2025 |
| 12. | தற்காலிக பட்டியல் விண்ணப்ப தாரர்களுக்கு ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 26 டிசம்பர், 2025 |
| 13. | வருங்கால தீர்வு விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்ட தேதி | 30 டிசம்பர், 2025 |
| 14. | வருங்கால தீர்வு விண்ணப்பதாரர்களுக்கு தகவல் குறிப்பாணை, மதிப்பீட்டு அணி மற்றும் தீர்வுத் திட்டங்களுக்கான கோரிக்கையை வழங்கிய தேதி. | 03 ஜனவரி, 2026 |
| 15. | தீர்வுத் திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 03 பிப்ரவரி, 2026 |
| 16. | இஓஐ சமர்ப்பிக்க மின்னஞ்சல் ஐடியைச் செயலாக்கவும். | ip.guptapower@gmail.com |

தேதி: 25 நவம்பர் 2025
இடம்: சூரத்

எஸ்டி/ சிஏ. பிரதீப் குமார் கப்ரா
எம்/எஸ்.க்கான ஐஆர்பி/ஆர்பி. குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்
ஐபிபிஐ பதிவு எண்: IBBI/IPA–001/IP–P01104/2017–18/11790
மின்னஞ்சல்:ip.guptapower@gmail.com




ஸ்ரீவில்லிபுத்தூர் நண்பர்கள் ரோட்டரி சங்கம் சார்பில் பார்வை குறைபாடுள்ள 50 பேருக்கு அரிசி, பலசரக்கு மற்றும் மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சிக்கு தலைவர் டி. கந்தசாமி தலைமை வகித்தார். மாவட்ட உதவி ஆளுநர் முருகதாசன் வரும் ஆண்டு உதவி ஆளுநர் பால்சாமி, பொருளாளர் கனக பெருமாள், ஜாகிர் உசேன், முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். செயலாளர் ராஜு நன்றி கூறினார்.

# காரைக்குடி தேனாறு தூர் வாரும் பணிக்கு ரூ. 5 லட்சம் நிதியுதவி: தாசில்தார் ராஜாவிடம் டாக்டர்.குமரேசன் வழங்கினார்



காரைக்குடி, நவ.25

காரைக்குடியில் வரலாற்று சிறப்புமிக்க தேனாறு ஆக்கிரமிப்பு அகற்றவும், 48 கிலோ மீட்டர் வரவும், முதல் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் துவக்கமாக நமக்கு நாமே திட்டத்தின் அடிப்படையில் ரூ.5லட்சம் நிதியினை காரைக்குடி தாசில்தார் ராஜாவிடம், புகழ்பெற்ற குளோபல் மிசன் பல்நோக்கு மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர் குமரேசன் வழங்கினார்.

காரைக்குடி சுற்று வட்டார கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் தேனாறு. இது சுமார் 48 கிலோ மீட்டர் தூரத்தைக் கொண்டது, இதன் தொடக்கம் கோட நாட்ச்சி குளத்திலிருந்து பாம்பாற்றில் சங்கமிக்கும் .

இந்த ஆற்றை மீண்டும் உயிர்பிக்க வேண்டும், அதாவது சுத்தப்ப டுத்தி மீள் உருவாக்க நடவடிக்கையை சிவகங்கை மாவட்ட நிர்வாகம் எடுத்துள்ளது. இதற்கு பலகோடி ரூபாய் செலவு ஆகும் என்பதால், தனியார் தொண்டு நிறுவனங்க ளை நாடியது இதன் அடிப்படையில் ,காரைக்குடி தாசில்தார் காரைக்குடி குளோபல் மிஷின் மருத்துவமனை சேர்மன் டாக்டர் குமரேசன் அவர்களை சந்தித்து பேசினார் .உடனடியாக நல்ல விசயத்திற்கு உதவுவதாக கூறினார் அதன் விளைவாக தேனாற்றின் மீள் உருவாக்க பணிகளுக்காக முதல் கட்ட தொகையாக 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை தாசில்தாரிடம் வழங்கினார்.

இந்த நிகழ்வு குறித்து மருத்துவர் குமரேசன் கூறும்போது நாம் சர்வ தேச அளவில் ஆறுகள் பாதுகாப்பு தினமாக மார்ச் 14ஆம் தேதி கொண்டாடுகிறோம். மேலும், நதிகள் நமது உயிர் வாழ்வில் இன்றி அமையாத வாழ்வாதாரமாகும். அவற்றை நாம் பாதுகாக்க வேண்டும் .

தொழிற்சாலை கழிவுகள், குப்பைகளை ஆற்றில் கலந்து மாச அவதை தடுக்க வேண்டும். ஆறு நதிகளின் இரு கரைகளிலும் மரங்களை நட்டு வளப்படுத்த வேண்டும் மழையால் வரும் நீரை குளங்கள், குட்டைகள் மற்றும் நிலத்தில் நீர்மட்டம் உயர இந்த ஆறு நமக்கு ஆதாரமாக விளங்குகிறது .இதுவரை மாசுபட்டு புதர் மண்டி கிடந்த தேனாற்று வழிகளை மாவட்ட நிர்வாகம் பல கோடி ரூபாய் செலவில் சுத்தப்படுத்தும் பணியை தொடங்க உள்ளது .

அதற்கு உதவியாக நாமும் இணைந்து அதாவது குளோபல் மிஷின் மருத்துவமனை மற்றும் டைம்ஸ் ஹெல்த் கேர் ஃபவுண்டேஷன் மற்றும்சாரிட்டபிள்டிரஸ்ட் மூலம் ரூபாய் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை முதற்கட்ட பணிக்காக தாசில்தாரிடம் கொடுத்துள்ளோம். இதேபோல் பல சமூக அமைப்புகள் உதவ முன் வந்தால் கூடிய விரைவில் தேனாற்றை தேன் சுவை ஆறாக மாற்றலாம் என்பது எனது கருத்து என கூறினார். நிகழ்ச்சியில் தாசில்தார் உடன் சமூக ஆர்வலர் இஸ்மாயில் உள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கோவிலூர் கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.


"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு**
**ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம்**
**திண்டுக்கல் மாவட்டம்**

ந.க.எண்:4574/2025/அ2 நாள்: 24.11.2025

**வேலை வாய்ப்பு அறிவிக்கை (Notification)**

திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஒன்றிய தலைப்பில் காலியாக உள்ள பதிவுரு எழுத்தர் பணியிடத்தினை நிரப்பிட ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் பதிவுரு எழுத்தர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள், காலிப்பணியிட விவரம், இன சுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்ப படிவம் ஆகியவற்றினை இம்மாவட்டத்தின் dindigul.nic.in என்ற இணையதளத்தில் 25.11.2025–ஆம் தேதி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் 25.11.2025 முதல் 24.12.2025–ஆம் தேதி பிற்பகல் 05.45 வரை ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் என்ற முகவரியில் நேரிலோ, அல்லது தபால் மூலமோ அனுப்பி வைத்திடத் தெரிவிக்கப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவிற்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஆணையாளர்,
ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
திண்டுக்கல் மாவட்டம்

வெ.ஆ.எண்.326/செமதொஅ/திண்டுக்கல்/2025 நாள்:24.11.2025